முருகப்பெருமான் துணை

**மகான் யோகானந்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.06.2022, வெள்ளிக்கிழமை

1. காக்கும் மகா சக்தியே
கருணையே வடிவான தவசியே
தேக்கும் கரும வினைகளை
திருவருளால் விரட்டும் ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமை கூறி
இனிமைபட சுபகிருது விடைதிங்கள்
இருபானேழ் திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 27 ம் நாள், 10.06.2022 வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் அருளாசி தன்னை
வழங்குவேன் யோகானந்தரும்
பாரதம் கொண்டே உலகினை
பண்பான தேசங்களாக மாற்ற உரைப்பேன்
4. உரைக்கவே ஞான பூமியான
உண்மை நெறி கொண்ட
குறைவிலா இந்தியாவில் துவங்கி
குவலயம் எங்குமே மாற்றம் தனை
5. மாற்றம் தனை நடத்தும் விதமாக
மாதவசி அரங்கனை படைத்து இருக்க
மாற்றம் காண வேண்டுமாயின்
மக்களெல்லாம் அரங்கன் வாழ்
6. அரங்கன் வாழ் பிரணவக்குடிலை
அனுகி தீட்சை அடைந்து
வரங்களாக சக்திகள் கூட்டி
வணங்கி உயர் சேவை ஆற்றிட
7. ஆற்றிட அகிலம் பின்பற்ற
அனைத்து நாடுகள் தனிலும்
ஆற்றல்பட கிளைகள் துவக்கி
அன்பர்களை உருவாக்கம் செய்திட
8. செய்திட அரங்க மகானின்
சேவை வடிவிலே உலகம்
அய்யமான தீதானவகை விலக்கி
ஆபத்தில்லா உண்மை ஞான வழியாக
9. வழியாகப் பின்பற்றி உயர்ந்து
வையகம் வளர்ச்சி மாற்றம்
அழியாமை கொண்ட மக்களை
அடைந்து அவர்களை வைத்தே

10. வைத்தே ஞான ஆட்சி
வடிவேலன் ஆசி துணைபட
உத்தமமாய் அமைத்து நன்கு
உலகமே ஞான ஆட்சிபெறும்

11. ஆட்சிவழி மக்கள் தேற்றம்
ஆன்மீக ஞான வழியாகி
மாட்சிமைபட உலகம் மீளும்
மொழிந்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–